<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,
சார்பு நீதிபதி, வந்தவாசி
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் திங்கட்கிழமை
<u>வழக்கிடை மனு எண்.03/2025 in அசல் வழக்கு எண்.265/2024</u>

V. துரை ..... மனுதாரர்/ பிரதிவாதி

/எதிர்/

J. மாலதி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 12.02.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெ.நேதாஜி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ஜசக்நியூட்டன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, இம்மனுவில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்று குறியீடு செய்ய வேண்டி உ.வி.மு.ச. கட்டளை VIII, விதி. 1 A (3) உ.வி.மு.ச -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

2.1) தான் மேற்படி வழக்கில் பிரதிவாதி என்றும், இம்மனுவின் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்/வாதி தன் மீது தான் அவரிடம் கடன் தொகையாக ரூ.6,00,000/- பெற்றதாகவும், அதற்கு தான் எவ்வித தொகையும் கொடுத்து பைசல் செய்யவில்லை என்றும், தான் எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் ஜெகதீசன் என்பவரிடம் கடன் பெற்று பைசல் செய்வது வழக்கமாக கொண்டிருந்ததாகவும், அதே போல் எதிர்மனுதாரர்/வாதியின் கணவரிடம் தான் 02.11.2018 அன்று தீபாவளி பண்டிகை காலத்தில் பெற்ற ரூ.25,000/- த்தை ஏற்கனவே தான் செலுத்திய தொகை போக மீதி தொகையையும் 09.03.2019 அன்று பொங்கல் பண்டிக்கைக்கு வியாபாரத்திற்கு பெற்றுக்கொண்ட தொகை ரூ.40,000/-த்தையும் சேர்த்து செலுத்திவிட்டதாகவும், தான் பெற்ற கடன் தொகைகள் முழுவதும் பைசல் செய்யப்பட்டதால் எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் பெயருக்கு எழுதி வைத்த பிராமிசரி நோட்டுகள் தன்னிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றும், புரோ நோட்டுக்களை வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டதாகவும், அவசரத்திற்கு எடுத்து தர இயலாது என கூறிவிட்டதாகவும், தான் எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்கு பைசல் செய்த புரோ நோட்டுக்களை திருப்பி தரவில்லை என்பதற்கு ஆதாரமாக தக்க ஆவணம் எழுதிக் கொடுக்குமாறு கேட்டதற்கு நீயே தனக்கு கடிதம் எழுதிக்கொடுத்தால் அதிலேயே தான் தக்க பதில் எழுதிக் கொடுத்துவிடுகிறேன் என எதிர்மனுதாரர் / வாதியின் கணவர் கேட்டதற்கு தானும் 09.03.2019 அன்று தான் எதிர்மனுதாரர்/வாதி கணவரிடம் கொடுத்த பைசல் செய்த பாண்டுகளை தனக்கு

திருப்பி தரவில்லை என்றும், இன்றுதேதி வரை தங்களுக்கும், எனக்கு எந்த பாக்கியும் இல்லை எழுதிக் கொடுத்த மனுவிலேயே மேற்படி எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் 09.03.2019 வரை தனக்கு எந்த கடன் இல்லை என எழுதி கையெழுத்திட்டு கொடுத்ததாகவும், அதற்கு செல்வராஜ் கையெழுத்து செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2.2) தான் பிழைப்பிற்கு மளிகை கடை வைத்து நடத்தி குடும்பம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர்/வாதியின் கணவரிடம் வியாபாரத்திற்காக தான் பெறும் சிறு கடன்களை முறையாக செலுத்தி வந்ததாகவும், எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் பெயருக்கு எழுதிக் கொடுத்த பைசல் ஆன புரோநோட்டுக்கள் எதிர்மனுதாரர்/வாதியின் வீட்டில் இருந்ததாகவும், தான் பெறாத பாண்டுகளில் இருந்த கையெழுத்தைப் பார்த்து எதிர்மனுதாரர்/வாதி போர்ஜரியாக கையெழுத்து போட்டு தன்னை மோசடி செய்து ஏமாற்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மேற்படி ஆவணத்தை ஏற்று தன் தரப்பில் குறியீடு செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர்/பிரதிவாதி கடந்த 17.04.2019 ல் ரூ.6,00,000/-த்தை எதிர்மனுதாரர்/வாதியிடம் கடனாக பெற்றதாகவும், கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்த சங்கதியை மட்டும் ஒப்புக்கொள்வதாகவும்,

மனுதாரர்/பிரதிவாதியானவர், எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் ஜெகதீசன் என்பவரிடம் கடன் பெற்று பைசல் செய்வது வழக்கமாகும் என்பதும் அதே போல் எதிர்மனுதாரர்/வாதியின் கணவரிடம் மனுதாரர் 02.11.2018 அன்று தீபாவளி பண்டிகை காலத்தில் பெற்ற ரூ.25,000/- தொகைக்கு ஏற்கனவே அவர் செலுத்திய தொகை போக மீதி தொகையையும் 09.03.2019 அ ன்று பொங்கல் பண்டிக்கைக்கு வியாபாரத்திற்கு பெற்றுக் கொண்ட தொகை ரூ.40,000/-த்தையும் சேர்த்து செலுத்திவிட்டதாகவும், அவர் பெற்ற கடன் தொகைகள் முழுவதும் பைசல் செய்யப்பட்டதால் எதிம்னுதாரர்/வாதியின் கணவர் பெயருக்கு எழுதி வைத்த பிராமிசரி நோட்டுகள் மனுதாரர் வசம் திருப்பி கொடுக்கவில்லை என்றும், புரோ நோட்டுக்களை வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்றும் அவசரத்திற்கு எடுத்து தர இயலாது என கூறிவிட்டதாகவும், எதிர்மனுதாரர்/வாதியின் கணவருக்கு பைசல் செய்த புரோ நோட்டுக்களை திருப்பி தரவில்லை என்பதற்கு ஆதாரமாக தக்க ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு கேட்டதாகவும், நீயே தனக்கு கடிதம் எழுதிக்கொடுத்தால் அதிலேயே தான் தக்க பதில் எழுதிக் கொடுத்துவிடுகிறேன் என எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் கேட்டதாகவும், மனுதாரரும் 09.03.2019 அன்று எதிர்மனுதாரர்/வாதி கணவரிடம் கொடுத்த பைசல் பாண்டுகளை மனுதாரருக்கு திருப்பி தரவில்லை என்றும், இன்று தேதி வரை தங்களுக்கும் தனக்கும் எந்த பாக்கியும் இல்லை என்று எழுதிக் கொடுத்த மனுவிலேயே எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் 09.03.2019 வரை தனக்கு எந்த கடன் இல்லை என எழுதி கையெழுத்திட்டு

கொடுத்தார் என்றும், அதற்கு சாட்சியாக செல்வராஜ் என்பவர் கையெழுத்து செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்வதாக குறிப்பிட்டிருக்கும் ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமில்லை என்றும், இவ்வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து மனுதாரர்/பிரதிவாதி பணம் பெற்றுக்கொண்டு திருப்பித் தராமல் காலம் கடத்தியதினால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்பும் பணத்தினை திருப்பித்தராததினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்படும் ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டுமென்றே தான் காலதாமதம் செய்யவில்லை என்று மட்டும தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றம், இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயமே, காலதாமதாக தாக்கல் செய்யப்படும் ஆவணத்தினை ஏற்றுக்கொள்வதற்கு கூறப்பட்டிருக்கும் காரணங்கள் சட்டப்படி ஏற்புடைவைகள் தானா? என்பது மட்டுமே ஆகும். எனவே மனுதாரர்/பிரதிவாதியின் மனுவினை எதிர்மனுதாரர்/வாதிக்குரிய செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது/

**4. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டுமா? என்பதே ஆகும்.**

(i) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது.

(ii) அசல் வழக்கானது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வாதி, பிரதிவாதி மீது வழக்கு தொகையைப் பெற வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் மனுதாரர் தரப்பின் முக்கிய கோரிக்கை யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை, வழக்குரையுடன் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது அந்த ஆவணத்தைக் பெற்றுக்கொண்டு குறியீடு செய்யப்படவேண்டும் என்பதே ஆகும். மனுதாரர் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் தற்போதுதான் கிடைக்கப்பெற்றன என்றும், வழக்கிற்கு மிக முக்கிய ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டும் என்பதே ஆகும். எதிர்மனுதாரர் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில், மனுதாரர் உரிய நேரத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய தவறியதற்கு சரியான காரணங்கள் குறிப்பிடவில்லை என்றும், மேலும் மனுதாரரை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதே ஆகும்.

(iii) அசல் வழக்கின் வாதி தான் சார்ந்திருக்கும் ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்யவெண்டும். அதேபோல் அசல் வழக்கின் பிரதிவாதி தான் சார்ந்திருக்கும் ஆவணங்களை எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கை பொறுத்தவரை மனுதாரர் வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணத்தை காலதாமதத்தை மன்னித்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கோரியுள்ளார். மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்று

குறிப்பிட்டு, அவைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிறார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் அந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) தற்போது மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பில் பெற்றுக்கொள்ளவேண்டுமா என்பதே இங்கு தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை ஆகும். அசல் வழக்கில் பிரதிவாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணத்தை இந்நீதிமன்ற அனுமதியுடன் பின்னிட்டு தாக்கல் செய்ய வழிவகை உள்ளது. எனவே இந்த ஆவணத்தை பெற்றுக்கொள்ளாமல் போனால் பிரதிவாதியின் தரப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு விடும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் தன்மை, சாட்சிய மதிப்பீடு மற்றும் வழக்குக்கு சம்மந்தப்பட்டதா போன்ற விவரங்கள் குறித்து வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பின் போதும் தீர்மானிக்கப்படும். எனவே அவைகள் குறித்து ஆழமாக ஆராயாமல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை பெற்றுக்கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக:-**

இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.03.16 17:27:23 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.03.16 17:27:29 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.